இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 05-05-2025

# பிரதமர் மோடிக்கு எப்படி தூக்கம் வருகிறது?

**கே**ரள மாநிலம் திருவனந்தபுரத்தில் விழிஞ்சம் துறைமுகத்தை திறந்து வைத்து உரையாற்றி இருக்கிறார் பிரதமர் மோடி. அங்கேயும் அவரை 'இந்தியா' கூட்டணிதான் மிரள வைத்திருக்கிறது.

"இந்தியா கூட்டணியின் முக்கியத் தூணாக இருக்கும் பினராயி விஜயனும், சசிதரூரும் ( காங்கிரசை சேர்ந்தவர்) இங்கே என்னோடு பங்கேற்றதால் பலர் தூக்கத்தை இழப்பார்கள்" என்று பேசி இருக்கிறார் பிரதமர் மோடி. நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து ஓராண்டு ஆனபிறகும் 'இந்தியா' கூட்டணி அவரை தூங்க விடாமல் வைத்திருக்கிறது என்பதற்கு உதாரணம்தான் இந்தப் பேச்சு.

நடப்பது அரசு விழா. கேரளாவில் நடக்கிறது. இதில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கலந்து கொள்கிறார். கேரளாவைச் சேர்ந்த சசி தரூர் கலந்து கொள்கிறார். இதில் என்ன புதுப் பெருமை கிடைத்துவிடப் போகிறது பிரதமர் மோடிக்கு?

**'இந்தியாவில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார் மோடி' என்று பினராயி விஜயன் பேசி விட்டாரா? அல்லது 'இந்தியா கூட்டணி அமைத்து மோடியை எதிர்த்த பாவத்தைச் செய்துவிட்டோம்' என்று பினராயி விஜயனும் சசிதரூரும் பேசிவிட்டார்களா? அப்படி எதுவும் நடக்கவில்லை. ஏன் இந்த 'டிராமா'? இப்போது ஏன் இது அவருக்குத் தேவைப்படுகிறது?**

பட்டப்பகலில் இந்திய நாட்டுக்குள் வந்து 28 பேரை சுட்டுப் பொசுக்கிவிட்டுப் போயிருக்கிறார்கள் பயங்கரவாதிகள். இதன்பிறகும் பிரதமர் மோடிக்கு எப்படி தூக்கம் வருகிறது?

**'கேரளாவில் இவ்வளவு பெரிய துறைமுகம் அமைக்கும் அதானியைப் பார்த்து குஜராத் மக்கள் கோபித்துக் கொள்வார்கள். ஏனென்றால் குஜராத்தில் கூட இவ்வளவு பெரிய துறைமுகம் இல்லை' என்று அந்த மேடையில் அதானிக்கு கிச்சுக்கிச்சு மூட்டும் வகையில் பிரதமரால் எப்படி பேச முடிகிறது?**

பகல்காமில் கொல்லப்பட்டவர் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்லப் போகவில்லை. காஷ்மீர் செல்லவில்லை. ஆனால் எப்போதோ நடக்கப் போகிற பீகார் தேர்தலுக்கு இப்போதே அவரால் போக முடிகிறது. அதானிக்காக கேரளாவை நோக்கி ஓடிவர முடிகிறது. ஆனால் பயங்கரவாத சம்பவத்தில் இறந்து போன குடும்பங்களுக்கு அஞ்சலி செலுத்தவோ, ஆறுதல் சொல்லவோ போக முடியவில்லை.

**"இந்த நாட்டிலே இந்த நாட்டின் வீரர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இந்த நாட்டின் எல்லைக்கு பாதுகாப்பு இல்லை. உள்நாட்டிலே இருக்கின்ற மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. அது குஜராத்தோ, கேரளாவோ, தமிழ்நாடோ, எந்த மாநிலங்களுக்கும் பாதுகாப்பு இல்லை. இந்த மாதிரி எதற்குமே பாதுகாப்பு இல்லாத அரசாங்கம் இருக்கிறது என்று சொன்னால், நமது கடமை என்னவென்று சொன்னால் அந்த அரசாங்கத்தைத் தூக்கி எறிய வேண்டியது நமது கடமையாக அமைந்திருக்கிறது" என்று குஜராத் முதலமைச்சராக இருந்த போது மோடி பேசினார். 11 ஆண்டுகளாக இந்தியாவை அவர் ஆள்கிறார். இதுதான் நிலைமை. அவருக்கு எப்படி நிம்மதியாக தூக்கம் வருகிறது.**

பதான்கோட் தாக்குதலில் 7 வீரர்கள் பலி பொம்பொரியில் எட்டு ராணுவ வீரர்கள் பலி உரி தாக்குதலில் 19 படைவீரர்கள் பலி போபால் வெடிகுண்டு தாக்குதலில் எட்டுப் பேர் காயம் அமர்நாத் கோவில் தாக்குதலில் ஏழு பேர் பலி லெத்திபோரா தாக்குதலில் 5 பாதுகாப்பு வீரர்கள் பலி புல்வாமா தாக்குதலில் 40 படைவீரர்கள் பலி இரஜோரி ராணுவ முகாம் தாக்குதலில் 3 ராணுவ வீரர்கள் பலி ஷோபியான் பகுதியில் நடந்த தாக்குதலில் 2 பேர் பலி பகல்காம் தாக்குதலில் 28 பேர் பலி இவை அனைத்தும் அவரது ஆட்சியில் நடந்த தாக்குதல்கள். அவரால் எப்படி நிம்மதியாக தூங்க முடிகிறது?

**2014 முதல் இந்திய எல்லைக்குள் சீன ஊடுருவல் அதிகமாகி வருகிறது. 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற மோதலில் இந்திய தரப்பில் 20 வீரர்களும், சீன தரப்பில் 40 வீரர்களும் பலியானாவர்கள். அருணாச்சல பிரதேசத்தில் 30 இடங்களுக்கு சீன மொழியில் பெயர்கள் வைத்து அதிர்ச்சியைக் கொடுத்தது சீனா. 2017 ஆம் ஆண்டு 6 பகுதிகளுக்கும், 2021 ஆம் ஆண்டு 15 பகுதிகளுக்கும், 2023 ஆம் ஆண்டு 11 பகுதிகளுக்கும், 2024 ஆம் ஆண்டு 30 பகுதிகளுக்கு பெயர் வைத்தது சீனா. "2000 சதுர கி.மீ. இந்திய பூமியை சீனா அபகரித்திருக்கிறது. சீனா அபகரித்துள்ள நிலம் ஒரு சிறிய தீவை விட 1000 மடங்கு பெரியது" என்று குற்றம் சாட்டினார் முன்னாள் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம். இதன்பிறகும் பிரதமர் மோடியால் நிம்மதியாக எப்படி தூங்க முடிகிறது?**

கடந்த பத்தாண்டு காலத்தில் 3100 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டார்கள். கடந்த 2024 ஆம் ஆண்டு மட்டும் 560 மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அண்டை நாடான இலங்கை, இந்திய மீனவர்களை வேட்டையாடுவது நிற்கவில்லை. '**பலவீனமானவர் இந்தியாவை ஆள்வதால் தான் இந்தத் தாக்குதல்கள்**' என்று மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது மோடி சொன்னார். ஆனால் அவரது ஆட்சியிலும் அதுதான் நடக்கிறது. அவரால் எப்படி நிம்மதியாகத் தூங்க முடிகிறது?

அமெரிக்கா மீது வரிகளையும் பிற தடைகளையும் விதித்துள்ள 'மோசமான நாடுகளில்' ஒன்றாக இந்தியாவை பட்டியலிட்டுள்ளது அமெரிக்கா. இதன் காரணமாக இந்தியா மீது 27 விழுக்காடு வரி விதித்துள்ளது அமெரிக்கா. இதுவரை 2 விழுக்காடு வரி மட்டுமே விதிக்கப்பட்டு வந்த நிலையில், இந்தியா மீது தற்போது 27 விழுக்காடு வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டிக்காத பிரதமர் மோடி, நிம்மதியாக எப்படித் தூங்குகிறார்?

**அதானிக்காக மட்டுமே விழித்திருக்கிறாரா?**

••

## தலைவராக சந்தித்த முதல் தேர்தலிலே வெற்றி பெற்ற

# சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங்கிற்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!



சென்னை, மே 5 -

மக்கள் செயல் கட்சியை அதன் 14 வது தொடர்ச்சியான வெற்றிக்கு வழி நடத்திச் சென்றுள்ள சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங்கிற்கு எனது வாழ்த்துக்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

மக்கள் செயல் கட்சியை (PAP) அதன் 14ஆவது தொடர்ச்சியான வெற்றிக்கு வழிநடத்திச் சென்றுள்ள பிரதமர் லாரன்ஸ் வோங்கிற்கு எனது வாழ்த்துகள். தலைவராகச் சந்தித்த முதல் தேர்தலில் இத்தகைய பெருவெற்றியைச் சிங்கப்பூர் மக்களிடம் இருந்து அவர் பெற்றுள்ளார்.

தமிழ் மக்களுடன் தொடர்ந்து நல்லுறவைப் பேணி, தமிழ் மொழியையும் பண்பாட்டையும் உயர்த்திப் பிடிக்கும் அவரது முயற்சிகள் அனைவரையும் அரவணைக்கும் சிங்கப்பூ ரின் தன்மையை வெளிப்படுத்துகிறது. சிங்கப்பூர் நாடாளுமன்றத்துக்கு புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய இதழியல் துறையின் பாதுகாவலர் –

# ஊடக சுதந்திரத்திற்காக உறுதியாக நிற்பவர்!

## 'இந்து' என்.ராம் பிறந்த நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மே 5 –

இந்திய இதழியல் துறையின் பாதுகாவலர் என்றும், ஊடக சுதந்திரத்திற்காக உறுதியாக இருந்தவர் என்றும் குறிப்பிட்டு, இந்து என்.ராம் அவர்களின் பிறந்த நாளை யொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்து குழுமத்தின் இயக்குநர். என்.ராம் அவர்களின் பிறந்தநாளையொட்டி,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

என் நடைப்பயிற்சி நண்பர், சிந்தனைத் தோழர், இந்திய இதழியல் துறையின் பாதுகாவலர் 'தி இந்து' என். ராம் அவர்களுக்கு இனிய 80-ஆவது பிறந்தநாள் வாழ்த்துகள்.

செய்திகளை ஆராய்ந்து, அதிகாரத்தை நோக்கிக் கேள்வியெழுப்பி, ஊடக சுதந்திரத்துக்காக உறுதியாக நிற்பவர் ராம் அவர்கள்.

அவரது அறிவாற்றல் தொடர்ந்து சிந்தனையைத் தூண்டி, மக்களிடையே பகுத்தாராயும் பண்புக்கு வழிகாட்டட்டும்!



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!



இராணிப்பேட்டை, மே5 -

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் 07.05.2025 புதன் கிழமை மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட கழக அலுவலகத்தில் (பாரதி நகர், சிப்கா ட்டில்) நடைபெறுகிறது.

எனவே, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

பொருள்:

1) "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்

2) கழக ஆக்கப்பணிகள்,.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

## நீலகிரி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் - நலத்திட்ட உதவிகள்!

## கா.இராமச்சந்திரன் வழங்கினார்!

நீலகிரி, மே 5 –

நீலகிரி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில், கழகத் தலைவர் – முதல்வர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கீழ் குந்தா தீபக் பரதன் ஏற்பாட்டின் படி, நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே. எம். ராஜு தலைமையில், தலைமை அரசு கொறடா தலைமை தேர்தல் பணிக்குழு செயலாளர் கா. ராமச்சந்திரன் சிறப்புரை ஆற்றி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஜெ.ரவிக்குமார் மற்றும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் வே. மதிமாறன் சிறப்புரை ஆற்றினார். பரமசிவன் ஆல்வின் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் கே. போஜன், பொ. லட்சுமி, வீரபத்திரன், கா. செல்வம், காளிதாசன், உதயதேவன், பிரேம்குமார், நந்தி ரவி, ரவி, வினோத்குமார், TKS. பாபு, சின்னான், சங்கர், ஜெகதீசன், விஜயகுமார், யசோதா, ராஜசேகர், திலீப் குமார், எம். ஈஸ்வரன், சத்தியநாதன், ராஜு, முத்து, கலீம், சாகுல் ஹமீது, வுன்சிலர் கஜேந்திரன், மகாலிங்கம், ஸ்ரீதர், சாஜ் சதீஷ்குமார் நன்றி கூறினார்.

# தி.மு.க. தணிக்கைக் குழுக் கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. தணிக்கைக்குழுக் கூட்டம், வருகிற 2025 மே 13, 14, 15 (செவ்வாய், புதன், வியாழன்) ஆகிய நாட்களில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்

அதுபோது தணிக்கைக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600018
நாள்- 03.05.2025

**டி.ஆர்.பாலு எம்.பி.**
பொருளாளர்
தி.மு.க.






மதுரை சித்திரை திருவிழாவை முன்னிட்டு செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பாக மதுரை தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சியை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்து பல்வேறு துறை சார்பாக அமைக்கப்பட்ட அரங்கங்களை பார்வையிட்டார் உடன் மாவட்ட செயலாளர் தளபதி எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் சங்கீதா, மேயர் திருமதி இந்திராணி, பொன் வசந்த், பகுதி மண்டல தலைவர்கள் திருமதி வாசுகி, திருமதி சரவண புவனேஸ்வரி, பகுதி செயலாளர் சசிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.